# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.06.14

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 08/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**விரிவுரையாளர் (நன்னடத்தை), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் தரம் I - (மருத்துவம் / பல் மருத்துவம்) மற்றும் (மருத்துவம் / பல் மருத்துவம்) அல்லாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ளல்.**

2012.10.09 ஆம் திகதிய 996 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஊடாக திருத்தப்பட்டவாறான 1997.11.21 ஆம் திகதிய 721 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்விசார் ஆளணியில் தற்போது நிலவும் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 2013.01.28 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க மற்றும் 2015.09.07 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. 01/2013 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்ட / அதற்காக பதிவு செய்துகொண்ட (நன்னடத்தை) விரிவுரையாளர்களை விரிவுரையாளர் (நன்னடத்தை) பதவியில் உறுதிப்படுத்தல் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கு பதவி உயர்த்தல் போன்ற இரு விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துமுகமாக 11/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் திருத்தியமைப்பதற்கு 2016.03.10 ஆம் திகதி நடைபெற்ற தனது 936 ஆவது ஆணைக் குழுக் கூட்டத்தின்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

03. விரிவுரையாளர் (நன்னடத்தை), விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I (மருத்துவம் / பல் மருத்துவம்) மற்றும் [(மருத்துவம் / பல் மருத்துவம்) - அல்லாத] பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் அல்லது பதவி உயர்த்துவதற்கு மற்றும் விரிவுரையாளர் (நன்னடத்தை) ஒருவரின் சேவையை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் மாற்றத்திற்குட்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் U-AC 3 (III) சம்பள அளவுத் திட்டத்தினை வழங்குவதற்காக 11/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முதுமாணிப் பட்டத்திற்கான தேவை கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் மாற்றத்திற்குட்படாதிருக்கும்.

(அ) (i) குறிப்பிட்ட துறையில் கலாநிதிப் பட்டம்

அல்லது

(ii) குறைந்தது 24 மாத முழு நேரக் கற்கைக் காலத்தின் பின்னர் பெற்றுக்கொண்ட குறிப்பிட்ட துறையின் முதுமாணிப்பட்டத்துடன் (அல்லது அதற்குச் சமமான பகுதி நேரக் கற்கை நெறி) ஆய்வுக் கட்டுரை முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியொன்று.

அல்லது

(iii) ஆய்வுக் கட்டுரை முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி கிரடிட் * 15 இற்கு குறையாத வகையில் குறைந்தது கிரடிட் * 60 இனைக் கொண்ட குறைந்தது 18 மாதங்களைக் கொண்ட குறிப்பிட்ட துறையில் முழு நேர முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

[*பாடநெறி அலகொன்றுக்கு / மொடியூலொன்றுக்கு வழங்கப்படும் ஒரு கிரடிட் அலகு இலங்கை தகைமைகள் கட்டமைப்புடன் இயைந்திருத்தல் வேண்டும்]

(ஆ) விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம்/ பொறியியல்/ விவசாய பீடங்களாயின்:

(i) குறிப்பிட்ட துறையில் கலாநிதிப் பட்டம்

அல்லது

(ii) குறிப்பிட்ட துறையில் முதுமாணிப் பட்டத்துடன் குறைந்தது 24 மாத காலத்தினைக் கொண்ட முழு நேர ஆராய்ச்சி.

04. அனைத்துப் பீடங்களிலும் குறைந்தது ஒரு வருட காலத்தைக் கொண்ட குறிப்பிட்ட துறையில் முழு நேர முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தலானது விரிவுரையாளர் (நன்னடத்தை) ஒருவரின் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு மற்றும் U-AC 3 (III) சம்பள அளவுத் திட்டத்தினை வழங்குவதற்கு போதுமான தகைமையாகும். எவ்வாறாயினும், அவ்வாறான முதுமாணிப் பட்டத்திற்கு பதிவு செய்வதற்கு முன்னர் கற்கைப் பிரிவுத் தலைவர், குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதி மற்றும் உபவேந்தரின் சிபாரிசின் அடிப்படையில் பட்டத்தின் ஏற்புடையதாகுதலை பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை அங்கீகரித்தல் வேண்டும். நிர்வாக சபையின் அங்கீகாரம், பாடநெறி பற்றிய விபரத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார சபையின் சிபாரிசுக்காக சமர்ப்பித்தல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு இறுதி அங்கீகாரத்தை வழங்கும்.

05. 01/2013 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் 2013.01.01 முதல் 2015.09.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள / அதற்காக பதிவு செய்துகொண்டுள்ள ஆனாலும் இந்தச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்திராத விரிவுரையாளர் (நன்னடத்தை) ஒருவர் குறிப்பிட்ட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருந்தால் மற்றும் பதவியில் உறுதிப்படுத்தல் மற்றும் /அல்லது பதவி உயர்த்துவதற்கான ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் அந்த முதுமாணிப் பட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அவரை பதவியில் உறுதிப்படுத்துவதற்கு மற்றும் /அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கு பதவி உயர்த்துவதனை கவனத்திற் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

06. மேலும், கலை, மானுடவியல், சமூக விஞ்ஞானம், சட்டம் மற்றும் முகாமைத்துவம் /வணிகவியல் கற்கைப் பீடங்களில் 01/2013 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் திகதிக்கு முன்னைய தினமான 2012.12.31 ஆம் திகதியன்று 721 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒரு வருட முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்ட / அதற்காக பதிவு செய்துகொண்ட விரிவுரையாளர் (நன்னடத்தை) ஒருவர் 721 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளராக பதவி உயர்த்துவதனை கவனத்திற் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

07. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2015.10.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதுடன், 2015.09.07 ஆம் திகதிய 11/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையானது 2015.09.30 ஆம் திகதி நடைமுறைக்கு வரும்வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது. மேலும், 2013.01.28 ஆம் திகதிய 01/2013 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையானது மேலே 05 ஆம் பந்தியின் கீழ் அமுல்படுத்தப்பட மாட்டாது.

08. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இந்த அறிவித்தல் தொடர்பாக குறிப்பிட்ட கல்விசார் ஆளணியினரின் கவனத்தினை ஈர்க்கச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/106